செ.வெ.எண்.33 நாள்.10.08.2017.

**திருநெல்வேலி மாவட்டம்**

**சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவஞ்சலி தின முன்னேற்பாடு நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம் – மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவஞ்சலி தினத்தினை கொண்டாடுவது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் மாவட்ட காவல் துறை அலுவலர்கள் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் தலைமையிலான ஆலோசனைக் கூட்டம் இன்று (10.08.2017) நடைபெற்றது.

கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கடந்த ஆண்டைப்போன்று, இவ்வாண்டும் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் (20.08.2017) நினைவஞ்சலி தினத்தினை அமைதியான முறையில் அரசுக்கு சம்மந்தப்பட்ட அனைத்து சமுதாய அமைப்பினர்களும், பொதுமக்களும் அமைதியான முறையில் நடத்திட மாவட்ட நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

பின்னர், கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

கடந்தை ஆண்டைப்போல, இவ்வாண்டும் முக்கிய பிரமுகர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்துவதற்கு தனித்தனியாக காலம் ஒதுக்கீடு செய்யப்படும். திருநெல்வேலி மாவட்ட அரசு சட்டக்கல்லூரி எதிரே அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் மணிமண்டபத்தில் நினைவு அஞ்சலி செலுத்துபவர்கள் ஒதுக்கீடு செய்த காலத்தில் முக்கிய பிரமுகர்கள், அவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களுக்கு நினைவு அஞ்சலி செலுத்துபவர்கள் மற்றும் முக்கிய பிரதிநிதிகள் 15.08.2017 முன்பே, மாவட்ட நிர்வாகத்திற்கு விண்ணப்பம் செய்து, தனித்தனியாக மாவட்ட காவல் துறையின் அவர்களின் உரியகால அனுமதி பெற்றிட வேண்டும்.

சுதந்திரப் போராட்ட வீரர் அவர்களின் மணிமண்டபத்திற்கு வரும் வாகனங்கள் புறவழிச்சாலையில் வரும்பொழுது, பொதுமக்களுக்கு போக்குவரத்து இன்றி வந்து செல்லலாம். சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் நினைவு அஞ்சலி செலுத்துபவர்களுக்கு கடந்த ஆண்டைப்போல, இவ்வாண்டும் வாகன கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. வாகனத்தில் வருபவர்கள், வாகனத்தின் மேல் அமர்ந்து வருவதோ, வாகனத்தின் இருபுறங்களில் தொங்கி செல்வதை தவிர்த்திட வேண்டும். கடந்த ஆண்டைப்போல வெளியூர் வாகனங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை இவ்வாண்டும் கடைப்பிடிக்க வேண்டும்.

மாவட்ட காவல் துறையின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடங்களில் மட்டுமே தங்களது வாகனங்களை நிறுத்திட வேண்டும். குறிப்பாக, விவசாய நிலங்கள், முக்கியச் சாலைகள் மற்றும் தனியார் இடங்களில் நிறுத்தக் கூடாது. திருநெல்வேலி மாவட்டத்தில் 5 முக்கிய சோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. நெற்கட்டும் செவலில் அஞ்சலி செலுத்து வருபவர்கள் சங்கரன்கோவில், இராஜபாளையம் செல்லும் சாலையிலிருந்து, மெயின்ரோடு, என்.ஜி.ஓ.காலனி, அச்சம்பட்டி, புன்னவனம்பேரி, கண்டியப்பேரி, பெரியூர் வழியாக நிகழ்ச்சி நடைபெறும் இடத்திற்கு வந்து சேரவேண்டும். அஞ்சலி செலுத்தி செல்பவர்கள் இராமச்சந்திராபும், சென்பாகபுரம், சிவலிங்கபுரம் மற்றும் சின்ன ஒப்பனையாபுரம் வழியாக சங்கரன்கோவில்–இராஜபாளையம் மெயின்ரோட்டில் உள்ள குவளைக்கண்ணி கிராமத்திற்கு சென்றடைய வேண்டும்.

சுதந்திரப் போராட்ட வீரர் ஒண்டிவீரன் அவர்களின் (20.08.2017) அன்று நினைவஞ்சலி செலுத்துபவர்கள் தமிழக அரசினால் தடை செய்யப்பட்ட பொருட்கள் மற்றும் வாகனத்தில் ஒலிப்பெருக்கி பொருத்த தடை செய்யப்பட்டுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் விளம்பர பலகைகள், சுவரொட்டிகள் வைக்கக் கூடாது. மேலும் ஒண்டிவீரன் அவர்களின் நினைவஞ்சலி செலுத்தும் இடங்களில் கழிப்பிட வசதி, குடிநீர் வசதி ஏற்பாடு செய்திட வேண்டும். மேலும், நினைவு தினத்தன்று நினைவிடம் சுற்றியுள்ள மதுபான கடைகளை மூட உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.அருண்சக்திகுமார்,இ.கா.ப., மாநகர காவல்ஆணையர் திரு.சுகுணசிங், இ.கா.ப மாவட்ட வருவாய் அலுவலர் திரு.முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ராமசுப்பிரமணியன், கோட்டாட்சியர்கள் (திருநெல்வேலி) திருமதி மைதிலி, (தென்காசி) திரு.ராஜேந்திரன், உள்பட காவல்துறை உயர் அலுவலர்கள், அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.